IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 128/2025 Date : 22.05.2026 P.W.5/LW.10**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தர்ராஜன் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | தண்டபாணி | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | எலவனாசூர்கோட்டை | வயது | 57 |
| 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை..**

நான் தற்போது எலவனாசூர்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்புஉதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் **திரு.சேட்டு** என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் **திரு.சேட்டு** அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது **30.07.2024 ம்** தேதி **14.00** மணிக்கு **இளவரசி க/பெ.பரஞ்சோதி** என்பவர் கொடுத்த புகாரை பெற்று மனு இரசீது எண்.713/2024 வழங்கி, பின்னர் மனு ரசீதை பார்வையிட்டும் **இளவரசி க/பெ பரஞ்சோதி** கொடுத்த புகார் **அ.சா.ஆ.3** ஆகும். நிலைய குற்ற எண். **213/2024 BNS** .பிரிவுகள் **191(2), 191(3), 126(2), 296(b), 115(2),118(1), 324(4), 351(3)** முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் **சந்திரா, வள்ளுவன்** ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.5** ஆகும். மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரியை தேடிச்சென்றதில் **எதிரி சீனிவாசன்** என்பவர் 30.07.2024 17–00 மணிக்கு எலவனாசூர்கோட்டை – ஆசனூர் ரோடு மேம்பாலம் அருகே நின்று கொண்டு இருந்தவரை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான **இளவரசி, பரஞ்சோதி, ராஜதுரை, பிரியா, ஆனந்தி** ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் காயம்பட்ட சாட்சியான பட்டியல் சாட்சி 1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சதாவெங்கடேசன் அவரை சந்தித்து காயச்சான்று பெற்றார். மருத்துவர் அளித்த காயச்சான்று **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் அவர் சாட்சிகளை விசாரணை செய்ததிலும், மருத்துவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவான **191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1),**

**324(4), 351(3) BNS என** இருத்ததை பிரிவு மாற்றம் செய்து **191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 118(2), 324(4), 351(3) BNS –** ன் படி பிரிவு மாற்றம் செய்தார். அந்த **பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் எதிரிகள் மீது **191(2), 191(3), 126(2), 296(b), 115(2), 118(1), 118(2), 324(4), 351(3) BNS –** ன் கீழ் புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடம் செல்லாமலும் வரைபடம் மற்றும் மகசர் சாட்சிகளை காவல்நிலையத்திலேயே விசாரணை செய்து எதிரிகள் மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.
மறுவிசாரணை – இல்லை.

Typed by steno–Typist M.Sowmiya

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.05.22 16:20:08 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 128/2025 Date : 22.05.2026 P.W.4 / LW.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தி | ஆதார்எண் | |
| கணவர் பெயர் | ரமேஷ் | தொழில் | டிபன் கடை |
| கிராமம் | எலவனாசூர்கோட்டை | வயது | 45 |
| 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் எலவனாசூர்கோட்டையில் வசித்து டிபன் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். அ.சா.1 –ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1–க்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன தகராறு என்று எனக்கு நேரிட்டு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது கடந்த 26.07.2024 ம் தேதி அ.சா.2–யிடம் எலவனாசூர்கோட்டையை சேர்ந்த வேலு மகன் சீனிவாசன் என்பவர் அசிங்கமாக பேசியதை அ.சா.1 தட்டி கேட்டபோது ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி நபரை அழைத்து விசாரித்து எச்சரித்து அனுப்பியதால் முன்விரோதம் கொண்ட சீனிவாசன் அவரது மச்சான்கள் முருகன், வினோத், செல்வி மற்றும் வானிஸ்ரீ ஆகியோர்கள் நேற்று 29.07.2024 ம் தேதி காலை 9.00 மணியளவில் அ.சா.2 –ன் மகன் பரத்தை அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் இறக்கிவிட சென்றபோது மேற்படி நபர்கள் அனைவரும் அ.சா.2 சென்ற இருசக்கரவாகனத்தை வழிமறித்து சீனிவாசன் என்பவர் அ.சா.2 –ஐ பார்த்து ஏய் தேவிடியா பையா நீ என் மீதே புகார் தருகிறாய் என சொல்லி திட்டினார் என்றும், அ.சா.1 ஏன் என்னிடத்தில் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு வினோத் என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் இதோடு ஒழிந்துபோடா என கூறி அ.சா.2 தலையில் அடித்தார் என்றும், அ.சா.2 வலது கையால் தடுத்ததால் வலது கை சுண்டுவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், அ.சா.2 வலது கையால் தடுக்காமல் இருந்தார். மேற்படி நபர் அடித்த அடி அ.சா.2 தலையில் பட்டு இறந்தே போய் இருப்பார் என்றும், உடன் இருந்த முருகன் தேவிடியா பையனை உயிரோடு விடாதே என கூறி கையில் வைத்திருந்த கட்டையால் அ.சா.2 வலது காலில் அடித்ததால் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், சீனிவாசன் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டியதால் இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும்,

மேற்படி நபர்கள் இருசக்கர வாகனத்தை சேதப்படுத்தினார்கள் என்றும், அங்கிருந்த நபர்கள் சண்டையை மறித்தபோது மேற்படி நபர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி எதிரிகளுக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.
மறுவிசாரணை – இல்லை.

Typed by steno–Typist M.Sowmiya

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-I,
Ulundurpet.